ARCHUNA

சிறுவர்களுக்கான மாத இதழ்

# அர்ச்சுனா

ஜூலை 2012

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு



## இராமாயணம்

## புனிதரான ஜோன் பொஸ்கோ

## சோம்பேறி


NIPPOLAC
PAINTS
லக்சுமி ஓகனைஷேசன்
Lukshmee Distributor
(வட மாகாண விநியோகஸ்தர்)
255. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்புக்குரிய எமது செல்வங்களே!

# நற்பழக்கவழக்கங்களால் உலகில் உயர்வோம்



விழிப்பு, உறக்கம், உழைப்பு இவைகளே எமக்கு வழமையாகி விட்டாலும் நமது வாழ்வு வளம் பெற அன்பு, கருணை, ஆதியாம் நற் பண்புகளால் அயலவரை நேசிப்போம். கல்வியின் உயர்வான பண்புகளான இவற்றுடன் நீதி, ஒழுக்கம், பொய்யின்மை ஆகிய பழக்கங்களால் எம்மை நாம் வளர்த்துக் கொள்வோம்.

நாம் வளரும் பாதையில் ஒளிபரப்பும் எமது நற் பழக்கவழக்கங்களால் அனைவரையும் மகிழ்வுக்க் உழைப்போம். அர்ச்சுனா நல்வாழ்வை நோக்கிய பயணத்தில் என்றும் உங்களுடன் உறுதுணையாக இருப்பான். உலகில் நற் பணியால் உயர்வோம். உலகை உயர்த்துவோம்.

ஆசிரியர்.

# இராமாயணம்

## 03 - தசரதனின் மகன்கள்

ஒருநாள் அரசவையில் மன்னன் தசர தன் வசிஷ்ட முனிவருடனும் மந்திரிக ளுடனும் நாட்டு நடப்புகளை விவாதித் துக் கொண்டி ருந்தபோது சேவகன் ஒரு செய்தியுடன் அங்கு வந்தான். மன்னனை வணங்கிய அவன் புகழ்பெற்ற முனிவர் விஸ்வாமித்திரர் அவரைக்காண வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியைத் தெரிவித்தான்.

இதைக்கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ச் சியடைந்தார். சிம்மாசனத்திலிருந்து எழுந்து அம்மாமுனிவரை வரவேற்கச் சென்றார். "வாருங்கள் முனிவரே! என்னு டைய சபைக்கு நீங்கள் வருவதற்கு நான் புண்ணியம் செய்திருக்கிறேன். என்னால் உங்களுக்கு ஏதேனும் காரியம் நடக்க வேண்டுமா? உத்தரவிடுங்கள் நான் உடனே நிறைவேற்றுகிறேன்" என்று மிகுந்த மரியாதையுடன் முனிவரிடம் கூறினார்.

'உன்னுடைய மேன்மையான சொற்களைக் கேட்டு நான் மிக வும் மகிழ்ச்சியடைகிறேன்.

மன்னனே நான் கேட்பதற்கு முன்பே எனக்கு உதவுவதாக நீ கூறுகிறாய்! சிறந்த இரகு வம்சத்தில் பிறந்த நீ சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாய் என்பது தெரிந்ததே'' என்று பாராட்டினார் முனிவர்.


"'கூறுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று மறு முறையும் பணி வோடு வினவினார்.

"மன்னனே! நான் ஒரு பெரிய யாகத் தைச் செய்கிறேன். மாரீசன் சுபாஹு என்ற இரு ராட்சசர்கள் மாமிசத்தையும் ரத்தத்தையும் என்னுடைய யாக குண்டத் தில் எறிந்து யாகத்தின் தூய்மையைக் கெடுக்கிறார்கள். என்னால் அவர்களைச் சபிக்க முடியும். ஆனால் நான் அப்படிச் செய்தால் அது என்னுடைய யாகத்திற்கு இடையூறாக இருக்கும். ஆகையால் யாகத்தை முடிக்கவும் அந்த ராக்ஷசர்களை கொல்லவும் ராமனை என் னுடன் அனுப்புவாயா! பத்து நாட்கள் அவனை என்னுடன் வைத்திருந்து பிறகு அயோத்திக்கு அனுப்பிவிடுகிறேன்'' என்றார் விஸ்வாமித்திரர்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத மன்னர் தசரதர் அதிர்ச்சியடைந்தார்.

"முனிபுங்கவரே! அந்தக் கொடிய ராட்சசர்களை தாக்க சிறுவனான ராமனை நான் எப்படி அனுப்புவேன்? என்னுடைய உயிரே ராமன் தான். அவனுக்கு ஏதாவது நேரிட்டால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். உங்களையும், உங்கள் யாகத்தையும் பாதுகாக்க நான் என்னுடைய படையை அனுப்புகிறேன். தயவு செய்து





ஏற்றுக்கொள்ளுங்கள்!" என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

விஸ்வாமித்திரருக்கு பெருங்கோபம் உண்டானது. "மன்னனே! பெருமை வாய்ந்த இரகு வம்சத்தைச் சேர்ந்த அரசருக்கு இது உரியதல்ல. நீ கொடுத்த வாக்கைக் காப்பாற்றியாக வேண்டும். ராமனை என்னுடன் அனுப்ப மாட்டேன் என்கிறாயே இதுதான் உன் முடிவான வார்த்தையா?" என்று கோபக் கனல் பறக்க முனிவர் கேட்டார்.

இருவரையும் சமாதானப்படுத்த வசிஷ்டர் முன்வந்து, "தசரத மன்னனே! ராட்சசர்களைக் கொல்ல ராமனை அனுப்புவது குறித்து நீ பயப்படவேண்டாம். ராமனுடன் லக்ஷ்மணனும் செல்லட்டும். எந்த ஆபத்திலிருந்தும் அவர்களை முனிவர் விஸ்வாமித்திரர் காப்பாற்றுவார். மன்னனே! முனிவர் விஸ்வாமித்திரர் ஒரு சிறந்த போர்வீரர், மிகச் சிறந்த ஆயுதங்களை உபயோகிப்பதில் வல்லவர், பிரம்மரிஷி என்ற உயர்ந்த பதவியைப் பெறுவதற்காக கடுமையான தவத்தை மேற்கொண்டவர் என்பதையெல்லாம் மறந்து விட்டீரோ?" என்று மென்மையாகக் கூறினார்.

வசிஷ்ட முனிவரின் அறிவுரையைக் கேட்டு மனம் தெளிந்த மன்னர் ராமனையும் லக்ஷ்மணனையும் அவருடன் செல்லச் சம்மதித்தார்.

"குழந்தைகளே! முனிவர் விஸ்வாமித்திரருடன் சென்று அவருடையயாகம் முடிவு பெற உதவி புரியுங்கள். உங்களுக்கு எது நல்லது, சிறந்தது என்பது அவருக்குத் தெரியும். அதனால் எப்பொழுதும் அவர் சொல்வதைக் கேளுங்கள். வெற்றி உண்டாகட்டும்!" என்று மகன்களை வாழ்த்திய தசரதர், முனிவருடன் அவர்களை அனுப்பி வைத்தார்.

# பாற்சோறு



ஒரு முயலுக்கு இரண்டு நெல் மணிகள் கிடைத்தன. முயல் ஒரு நெல் மணியை நரியிடம் கொடுத்தது. மற்றயதை ஒரு நல்ல இடத்தில் விதைத்தது.

நரி தனக்குக் கிடைத்த நெல் மணியை அடுப்பில் போட்டு விட்டது.

முயல் தான் விதைத்த நெல் மணிக்கு தினந்தோறும் தண்ணீர் ஊற்றிக் கவனித்து வந்தது.

சிறிது காலத்தில் நெல் பயிராகி, நெற்கதிராகி நிறைய நெல்மணிகள் கிடைத்தன. முயலுக்குப் பயங்கர சந்தோஷம்.

நாங்கள் பாற்சோறு ஆக்கலாம். என்று நரி முயலுக்கு ஆலோசனை சொன்னது. முயல் பாற்சோறு ஆக்கியது. பாற்சோறு சாப்பிட காம்பில்லா இலை தேடி வருமாறு நரி முயலுக்குச் சொன்னது.

முயல் இலை தேடச் சென்றது. திரும்பி வந்து பார்த்தால், நரி பாற்சோறு முழுவதையும் சாப்பிட்டு முடித்திருந்தது. முயல் கவலைப்பட்டது.

இத்தகைய மோசம் செய்யும் நண்பர்களுடன் பழகக் கூடாது என்பதை முயல் நன்கு உணர்ந்து கொண்டது.


# பண்ணை விலங்குகள்!

மனிதர்களால் சில விலங்குகள் பண்ணையில் வளர்க்கப் படுகிறன. பெரும்பாலும் அவை உணவுப் பொருட்களை நமக்குக் கொடுக்கின்றன. ஆனால் சில விலங்குகள் கம்பளி போன்ற நாம் பயன் படுத்தும் பொருட்களைக் கொடுக்கின்றன. பண்ணை விலங்குகள் வீட்டு விலங்குகளின் குடும்பத்தைச் சேர்ந்தவை. ஆனால், சில காடுகளில் வாழக்கூடியவை. உலகம் முழுவதும் பெரும்பாலான செம்மறி ஆடுகள் மலைப் பகுதியில் வாழ்கின்றன.

## காவல் நாய்கள்




விவசாயிகள் காவல் நாய்களை ஆட்டு மந்தைகளைப் பாதுகாக்கவும், விவசாய நிலங்களை பாதுகாக்கவும் பயன் படுத்துகின்றனர். இந்த நாய்கள் மிகவும் புத்திசாலிகளாக இருக்கின்றன. இவற்றை எளிதில் பழக்கபடுத்தி விடலாம். இந்த ஒரிஜினல் அல்சேஷன் நாய்கள் அடர்ந்த முடி உடையனவாக உள்ளன.



## பண்ணை மாடுகள்

விவசாயிகள் மாடுகளை பண்ணையில் பால் உற்பத்திக்காக வளர்க்கின்றனர். முன்பெல்லாம் விவசாயிகள் தமது கைகளாலேயே பால் கறப்பர். ஆனால், இன்று இயந்திரம் மூலம் மடியிலிருந்து பால் எடுக்கப்படுகிறது.




## பன்றிகள்


விவசாயிகள் பன்றிகளை இறைச்சிக்காக வளர்க்கின்றனர். பன்றி ஒரே பிரசவத்தில் பத்துக்கும் மேற்பட்ட குட்டிகளை போடுகிறது.



## செம்மறி ஆடுகள்

செம்மறி ஆடுகள் ரோமங்களுக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகிறன. ஆண்டுக்கு ஒரு முறை செம்மறி ஆட்டின் உடலில் இருந்து ரோமம் எடுக்கப்படுகிறது. தற்போது கைகளால் ரோமத்தை அகற்றுவது இல்லை. இயந்திரம் கொண்டு அகற்றப்படுகிறது. இது உடலில் எந்தக் காயமும் ஏற்படுத்துவது இல்லை. பாலிலிருந்து வெண்ணை மற்றும் சீஸ் எனப் பலவும் தயாரிக்கப்படுகின்றன.






## கோழிகள்

விவசாயிகள் கோழிகளை முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கின்றனர். சேவற் கோழி பெட்டைக் கோழியை விடவும் பெரிய கொண்டையும் நீண்ட வாலும் உடையவை. சேவற் கோழி சூரியன் உதிக்கும் முன் கூவும். இவை திறந்த வெளியில் வாழ்கின்றன. ஆனால், மின்சாரம் மூலம் பொரிக்கும் கோழிகள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன.

# புனிதரான ஜோன் பொஸ்கோ




ஏற்கனவே நீண்டகாலமாக, அவருடைய தாய் புதுநன்மைக்காக அவரைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். முதல் பாவ சங்கீர்த்தனத் துக்காகவும் அவரைத் தயார் செய்தாள். அவள் அவரைத் தயாரித்த முறையானது, அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்ய ஜானை அதிக ஆவல் கொள்ளச் செய்தது. "நல்ல இறைவனுடைய மன்னிப்பைப் பெற்ற ஒருவன் தன் உள்ளத் தில் பாரம் அதிகம் குறைந்திருப்ப துபோல் உணர் கிறான்'' என்று ஜான் கூறுவார்.




1826 - ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதி யில், பாஸ்காப் பெருவிழாவன்று, ஜான் அப்பத் தின் வடிவில் நம் ஆண்டவரை முதல் முறை யாக, தன் உள்ளத்தில் வரவேற்றார். அன்று காலை யில் எவரோடும் ஒரு வார்த்தைகூடப் பேசக்கூ டாது என்று ஜானுக்கு தாய் அறிவுரை கூறியி ருந்தாள். இயேசுவைப்பற்றி மட்டுமே அவர் நினைத் துக் கொண்டிருக்கட்டும் என்பது அவளுடைய நோக்கம். பெற்றோர் ஏழையாயிருந்ததால், அன்று உணவு சாதாரணமாகவே அமைந்தி ருந்தது. ஆனால் எல்லோருடைய உள்ளங்க ளிலும் மகிழ்ச்சி நிறைந்திருந்தது.




அப்பொழுதுதான் ஜான் ஒரு கனவு கண்டார். தன் வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதை அக்கனவு அவருக்குக் காண்பித்தது. இதோ அக்கனவு: இறைவனைப்பற்றி இகழ்ச்சியாய்ப் பேசி, ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்த கெட்ட பையன்கள் மத்தியில் தான் இருப்பதைக் கண்டார். அவருக்குக் கோபம் பொங் கியெழுந்து, ஓடிப்போய் அவர்களுடைய கன் னங்களில் மாறிமாறி அறைந்தார்.




ஆனால் திடீரென ஒரு மனிதன் தோன்றி னார். அவருடைய முகம் சூரியனைப்போல் பிர காசித்தது. "தம்பி, சிறுவர்களை இவ்வாறு அடித்து அல்ல, மாறாக அன்பினால் மட்டுமே அவர்களை உன் நண்பர்களாக்க முடியும். நல்ல வர்களாய் வாழ அவர்கள் என்ன செய்ய வேண் டும் என்று பக்குவமாய் விளக்கிக் காட்டுக'' என்று அவர் சொன்னார். "ஆனால் நீங்கள் யார்?'' என்று ஜான் வினவினார். அதற்கு அந்த மனிதர் புன்முறுவலுடன் "நீ யாரை நோக்கி அடிக்கடி செபிக்கின்றாயோ அவளின் மகன் தான்" (இயேசுவே தான் அவர்) என்று பதில் அளித்தார்.




பின்னர் ஓர் அழகான மாது தோன்றினாள். அவள் விண்மீன்கள் பொறிக்கப்பெற்ற மேலாடை அணிந்திருந்தாள். (அவள் தான் மரியாள்) அவள் ஜானின் கையைப் பிடித்துக்கொண்டு, "இதோ பார்" என்றாள். பையன்கள் அனைவரும் மறைந்து விட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக, கொடிய மிருகங்கள் கூட்டம் காட்சியளித்தது பெண்மணி மீண்டும் கூறுவாள்: "நான் செய்யப்போகும் புது மையைப் பார். கொடிய மிருகங்கள் எல்லாம் நல்ல வைகளாக மாறிவிடும். உன் கண்காணிப்பில் வரவிருக்கும் பையன்களிடத்திலும் நீ அந்த மாதிரிப் புதுமையைச் செய்வாய்"




ஜான் தன் கண்களை விரித்து, உற்று நோக்கினார். ஆட்டு மந்தைதான் காணப்பட் டது. பின்னர் ஜான் கண்விழித்துக் கொண்டார். மறுநாட் காலையில் தான் கண்ட கனவைத் தன் சகோதரர்களிடம் கூறினார். "நீ ஓர் ஆயனாக (ஆடு மேய்ப்பவன்) மாறுவாய்" என்றான் சகோதரன் ஜோசப். "நீ கொள்ளைக் கூட்டத்தின் தலைவ னாவாய்" என்று அந்தோணி குறும்புத்தனமாய்ச் சொன்னான். தாய் கூறுவாள்: "ஒருவேளை நீ குருவானவராகலாம்" தாயன்பு நிகழப்போவ தைச் சரிவர யூகிக்கச் செய்தது.




உண்மையிலேயே ஜான் ஒரு நாள் தன் தாயை நோக்கி ''அம்மா, நான் குருவானவராக விரும்புகிறேன். ஏற்கனவே வெகு நாட்களாகவே அந்த யோசனை என்னிடம் இருந்தது" என்றார். "ஆனால் நாம் தனவந்தர்கள் அல்லவே! உன் படிப்புக்கான செலவுகள் நம் சக்திக்கு அப்பாற்பட்டவை... சரி, அது இருக்கட்டும்... நீ ஏன் குருவானவராக விரும்புகிறாய்?" என்றாள் தாய் - ''என் வாழ் நாட்களைச் சிறுவர்களுக்காகச் செலவிடத்தான். அவர்கள் முதலில் என்னை அன்பு செய்யுமாறு கைவசப்படுத்தி, பின்னர் இறைவனை அன்பு செய்யச் செய்வேன்"




இதற்கிடையே, தன் நண்பர்களை இறைவன் பக்கம் எவ்வாறு கொண்டு வரலாம் என்பதுபற்றி அவர் சிந்தித்தார். ஒரு நாள் பக்கத்து ஊரில் கயிற்றில் நடனம் ஆடி வித்தைகள் பல செய்பவனைக் கண்டார். "எனக்கும் அவ்வாறு செய்யத் தெரிந்தால் எவ்வளவோ நலமாயிருக்கும்! பிள்ளைகள் கூட்டம் கூட்டமாய் என் அண்டை வருவார்கள். அப்பொழுது அவர்களைச் செபிக்கச் செய்ய அல்லது பாட்டுப் பாடவைக்க எளிதாயிருக்கும்" என்று தனக்குள்ளே எண்ணினார்.

# கண்டறியாதது

ஆச்சிமுத்து
பேனைமூடியை வாயில்
வைத்தொரு பெட்டை ஊதினாள்
ஒரு குழல்.
கோயில வீதியைச் சுற்றிவந்து
பண்டாரம் ஊதினார் சங்கினை,
பாலறா இளம் பாலன் வாயினிற்
பாரடாகுருவிக்குழல்.
வேணுகானமும் நாகசின்னமும்
யாவுமே குழலோசையே

வடிவேலு
கொடியேற்றத் திருவிழா
கோயிலால் வரும்போது
தம்பியன் ஊதுகுழற் கம்பியினை
உள் தள்ளி வெளியிலே இழுத்து
மீண்டும் இவ்வழி செய்யச்
செய்ய 'உய்ஒய்'யென்
றோசைநல்கும் ஒரு
குழல் வேண்டுமென்றான்.

கந்தையா
ஊதுகுழலோசைகேட்டு
வகையுறும்
வடிவேலே;
ஏதுஇது? எப்படியாய்
ஒசையெழும் எனக்கூறு.

வடிவேலு
குழல்களை விளக்கு முன்பு
சுருதியை, உரப்பை, மற்றும்
சங்கீதம் எனவும் சந்தைச் சந்தடி

என்றும் எல்லாம்
இங்கே நாம் கருதுகிற
சொற்பொருளின் வேற்றுமையை
என்னென்று கூறுகிறேன்,
இதனைக்கேள் கந்தையா.
கைகளைத் தட்டும்போதும்,
கைப்பொருள் நழுவும்போதும்
கூரையில் குரங்கு தாவ ஓடுகள்
நொறுங்கும்போதும்
'பிறேக்' இடநிற்கும் கார்கள்
'கிறீச்'
எனக்குலுங்கும் போதும்
சப்பாத்து மிதிக்குந்தோறும் மண்
கரகரக்கும் போதும்
இடையிலே இன்னொருவர்
தொலைபேசி பேசியிடின்
சுத்தமாய்த் தாளலயம் பிறழாது
பாடுகிற பால்கலந்த சர்க்கரையின்
தேன்மொழியைக் கூட! அட சீ
'என்னதொல்லை இது' கடும்
இரைச்சல் எனச்சொல்வோம்.

கந்தையா
பல்லியம் இயம்பும் போதும்
மெல்லிசை பாடும்போதும்
சங்கீதம் என்று சொல்லிச் 'சபாஷ்'
இடும் நமக்கெல்லாமோ
சீக்காய் அடிப்பதும் சிலநேரம்
சங்கீதம், இரைச்சல் என்றால்
என்ன அது, சங்கீதம் தான் என்ன?

வடிவேலு
ஒலியியக்கம் அலைவடிவில்
உண்டாகும் எனச் சொன்னேன்
ஒழுங்கானோர் அலைவடிவம்
பின்னடுத்து நிகழுமெனில்
அதுவேதான் சங்கீத ஒலியாகும்
அதனைவிட ஒழுங்கில்லா
அலைவடிவம் ஆக்குவதே
இரைச்சலென்பர்.

## குழல்



ஆச்சிமுத்து
சுருதி, உரப்பென்ற சொற்களுக்குக்
கருத்தென்ன?

வடிவேலு
சுருதி உயர ஒலி கீச்சிட்டு
வெளியேறும் சுருதி இழிய ஒலி
உறுமும், தடித்துவிடும்.
ஒலியாக்கி செக்கனிலே
உண்டாக்கும் அதிர்வளவை
மீடிறன் என்றுரைப்பார்கள்
அதிர்வெண்ணும் அதுவேதான்

சுருதியினை அதிர்வெண்ணே
கட்டுப்படுத்துவது.

கந்தையா

சீக்காய் அடிக்குமதே சுருதியிலே
பாடிடினும் சீக்காயின் உரப்பினை
நாம் பெறுவதில்லை ஏன் வடிவேல்?

வடிவேலு

ஒலியாக்கம் நிகழ்கையிலே ஊட்டப்
படும் சக்தி ஒலியின் உரப்பை
நிருணயிக்கும் காரணியாம்.

கந்தையா

உண்மையே இல்லையெனில்
இரவு பகல் முணுமுணுக்க
எங்காலை வரும் சக்தி
என்னுடைய அவவுக்கு?
குரும்பட்டி விழுந்தவுடன் மெல்ல
ஒலிகேட்கும். தேங்காய்
விழும்போதேன் உரப்பு
மிகுதியுறும்?

வடிவேலு

மோதுகையிற் பெரும்பொருளின்
சக்தி மிக அதிகம்
ஆதலினால் தான் இந்த உரப்பு
வித்தியாசங்கள், சீனவெடி வெடித்த
பின்னர் காதிரண்டும்
'கிண்கி'ணெனல் வெடிப்பினிலே
ஆகிவரும் பாரிய அச்சக்தியினால்
திண்மை மிகநெருங்கியெழும்
அலைகளினால் விளைவதுவே.

ஆச்சிமுத்து

குழல்களது தொழிற்பாடு
தாற்பரியம் தமைச் சொல்லு.

வடிவேலு

காற்றதிர் கருவியான குழல்களில்
வாயைவைத்தே ஊதிடும் மூச்சுச்
சென்றே வளிநிரல் அதிரவைக்கும்,
குழலினில் துவாரம் மூடி,
முசலமொன் றசையவிட்டும்
வளிநிரல் நீளந்தன்னை இருவிதம்
மாறல்கூடும்.
நிரலின(து) அகலம் மாறச்
சுருதியும் மாறக் காண்போம்
நீண்டுகள் குழாயினின்றும்
தாழ்ந்ததோர் சுருதி தோன்றும்
குறுகி ஒடுங்கையிலே உயர் சுருதி
உண்டாகும் காற்றுக் கருவிகளின்
பொது நியம் இதுவேதான்.



கந்தையா

வடிவேலா! உன்துணைவி
வயலினொடு குரலினிய
இசைஞானி முத்தம்மா இசைமாரி
பொழிவாளோ?

சுருதி- Pitch
பின்னடும் - Successive
உரப்பு- Loudness
மீடிறன் - Frequency
பல்லியம் - Orchestra
முசலம் - Piston


# சுபாஸ் பயணம் ௨ போகிறான்




பஸ் பயணிக்கும் பாதை வெகு மோசமாகச் சேதமடைந்திருந்தது. துள்ளிப் பாய்ந்து குதித்துக் குதித்துப் போகும் பஸ் பயணம், பயணிகள் பலருக்கும் வேதனையைத் தந்தது. ஆனால் நின்று கொண்டே கண்ணாடி ஊடாக அங்குமிங்கும் பார்த்தபடி பயணம் செய்த சுபாஸ் பஸ் குலுங்கும் வேளைகளில் எதிரில் இருந்த ஆசனத்தில் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

பாலத்தின் இரு மருங்கிலும் கடல் தெரிந்தது. அந்தப் பாலத்தில் ஒரு பக்கக் கடற்பரப்பில் ஆங்காங்கே கம்புகள் நாட்டி அவற்றில் வலைகளை இணைத்திருந்தார்கள். அதனைப் பார்த்த சுபாஸ் அது என்னம்மா எனத் தாயாரை விசாரித்தான். அதற்கு அவர் அதுதான் களங்கட்டி. அதன் மூலம் மீன் பிடிப்பார்கள் என்ற போது அதெப்படி மீன்களைப் பிடிக்கும் ஆட்களை அங்கே காணவில்லையே என்றான் சுபாஸ்.

களங்கட்டி என்பது மீன் பிடிக்கும் ஒரு பொறி. அது ஆழங்குறைந்த கடலில் அமைக்கப்படுகிறது. ஒரு ஓரத்தில் தொடர்ச்சியாகக் கம்புகள் நடப்படும். மறுஓரத்தில் வட்டவடிவமாக அவை நடப்படும். அவ்வாறு நாட்டப்பட்ட கம்புகளை வலைகளால் இணைத்து விடுவார்கள். வட்ட வடிவில் கம்புகள் நாட்டப்பட்ட இடத்தில் இணைக்கப்பட்ட வலையில் மீன்கள் தாமாகவே வந்து சிக்கும் வகையில் அது பொறியாக அமைந் திருக்கும். களங்கட்டியின் அருகில் வரும் மீன்கள் அந்தத் தொடர் கம்புகளின் வலைத் தொடுப்புக்களைத் தொடர்ந்து சென்று வட்டமான வடிவில் கம்புகள் நடப்பட்ட வலைப் பொறியின்




வாயிலால் உள்ளே சென்றுவிடும். அவை வெளியேற வாய்ப்புக்கள் இல்லை.

அந்த வட்டமான வலைப் பொறிக் குள்ளே இருந்து தப்பிச் செல்லும் வகை தெரியாமல் மீன்கள் அதற்குள்ளேயே நீந்திக் கொண்டு இருக்கும். மாலையி லும் காலையிலும் அந்தக்களங்கட்டியில் சிக்கியுள்ள மீன்களைப் பிடிக்கச் செல் பவர் அங்குள்ள மீன்களைப் பிடித்துச் சேர்த்துத் தமது படகுகளில் ஏற்றிக் கரைக் குக் கொண்டு வருவார்கள் என்றார்.

அதைக்கேட்ட சுபாஸ் அந்த வலைப் பொறிக்குள் மீன்கள் நீந்தும் என்று சொன் னீர்களே அம்மா அவற்றை அவர்கள் எப் படிப் பிடிப்பார்கள்? என்று கேட்டான். அவற்றைப் பிடிக்க வலையினால் கட்டப் பட்ட தேவடி போன்ற பை ஒன்றைப் பயன் படுத்துவார்கள். அதனை நீரினுள்ளே அமிழ்த்தி மீன்களைப் பிடிப்பார்கள் என் றார் தாயார். அங்கு காணப்பட்ட களங் கட்டிகளை சுபாஸ் ஆச்சரியமாகப் பார்த் தான். பஸ் இப்பொழுது பாலத்தைக் கடந்து நீண்ட தார்ப் பாதையில் ஓடிக் கொண்டிருந்தது.

மீன்கள் உயிருடன் தானே அம்மா இருக் கும் ஓம் ஓம் உயிருடன் தான் இருக்கும். அவற்றைக் கரைக்கு எடுத்துவரும் போதே அவற்றில் சில இறந்துவிடும். ஏனை யவை துடித்துக் கொண்டே இருக்கும் அதனைக் கேட்டு அந்த மீன்களைப் பற் றிக் கற்பனை செய்தபோது அவனுக்கு அவற்றின் மீது இரக்கமாக இருந்தது.

அவை பாவம் என்னம்மா? என்றான் துயர உணர்ச்சி தோன்ற. அதற்கு மேலும் அவை பற்றி விசாரிக்க அவனுக்கு மனம் வரவில்லை. அமைதியானான். ஆனால் பாதை ஓரமெங்கும் புல் வெளிகளும் ஆங் காங்கே பனை மரங்களும் காணப்பட் டன. அவற்றையெல்லாம் பார்த்து இரசித் தபடி சுபாஸ் பயணித்துக் கொண்டிருந்





தான். மாரி காலமானதால் பாதை யோரத்தில் காணப்பட்ட நீர்நிலை களை அவதானித்த சுபாஸ் இது என்னம்மா கடலா? குளமா? என்று கேட்டான்.

இது கடலோ குளமோ அல்ல. அது மழை வெள்ளத்தால் நிரம்பிய பள்ளங்கள், குழிகள் என்றார் காமாட்சி. நீண்ட தூரம் தொடர்ச் சியாகச் சில இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றது. ஓரிடத் தில் பல்வேறு பறவைகள் நீர் தேங்கி நின்ற அந்த இடத்தில் நிறையவே காணப்பட்டன. அவற்றில் வெள்ளை நிறமான கொக்குகளும் மிகவும் பெரிய சைபீரிய இனத் தாராக்களும் நீந்தியும் பறந்தும் அந்த வெள்ள நீரின் மேல் தெரிந்தன. அவற்றைக் கண்ட சுபாஸ் அவை கொக்குகளா அம்மா என்று கேட்டான்.

ஓம் ஓம் கொக்குகளும் சைபீரியத் தாராக்களுந்தான் பறக்கின்றன. அங்கே கறுப்பாகத் தெரியும் பறவைகள் கடற் காகங்கள் என்றாள் காமாட்சி.

கடற்காகங்கள் என்றால் என்னம்மா?

அவை காகங்களைப் போல் கறுப் பான பறவைகள். கடற்புறத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றன.

இது கடலில்லைத்தானே?

இது கடல் இல்லைத்தான். இந்த வெள்ள நீருக்கு அப்பால் சிறிது தூரத் தில் தெரிவது கடல்நீர். அது குளம் போல அமைதியாக இருக்கிறது. இது குடாக்கடல் என்பதால் அலைகள் பெரி தாக எழுவதில்லை என்றாள் அம்மா.

அவற்றைக் கேட்ட சுபாஸ் அங்கே பறந்து பறந்து அமர்ந்து எழுந்து செல்லும் பறவைகளை வேடிக்கை பார்த்தான்.

கிழக்கிலிருந்து மேற்காக ஓடிக் கொண்டிருந்த பஸ் ஒரு வளைவில் திரும்பி தெற்கு நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. புல் வெளிகளைக் கடந்து மனைகளும் கோவில்களும் நிறைந்த அந்தப் பாதை ஓரங்களில் ஆங்காங்கே பூவரச மரங்களும் புளிய மரங்களும் காணப் பட்டன.

பஸ்ஸின் அயலில் காணப்படும் காட்சி களை இரசித்தபடியே சுபாஸ் பஸ்ஸில் பயணித்தான்.

# சோம்பேறி!



ஓநாய் ஒன்று மிகவும் களைத்துப் போய் பசி மயக்கத்தில் சந்தன முல்லை என்ற காட்டில் படுத்துக் கிடந்தது. கடந்த இரண்டு நாட்களாக ஒன்றும் சாப்பிடாததால் பசி மயக்கத்தால் அது சோர்ந்து கிடந்தது. அந்த வழியாக முயல் ஒன்று கரட் கிழங்குகளைச் சுமந்தபடி வந்தது.

அதைக் கண்ட ஓநாய்க்கு வாய் ஊறியது. ``முயல் தம்பி நீ மிகவும் அழகாக இருக்கிறாய் உன் அழகைப் போலவே நீ கொண்டு செல்லும் கரட் கிழங்கும் மிக்க அழகாக இருக்கிறது'' என்று கூறியது.

உடனே முயல் ``ஓநாய் அண்ணா! நீங்கள் என் அழகைப் பாராட்டுவது இருக்கட்டும். இந்த கரட் அழகாக இருக்கின்றது என்று ஏன் கூறினீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று கண்டிப்புடன் கேட்டது முயல்.

``முயல் தம்பி! நான் சாப்பிட் இரண்டு நாட்கள் ஆகின்றன. மிகவும் பசியோடு இருக்கின்றேன். இந்த கரட் கிழங்குகளைச் சாப்பிடக் கேட்கலாம் என்ற ஆவலோடு அவ்வாறு பேசினேன். எனக்கு இந்தக் கரட் கிழங்குகளைக் கொடுப்பாயா?'' என்று கேட்டது.



உடனே முயல் ``ஓநாய் அண்ணா! நான் இந்தப் பாதையின் வழியாகச் செல்லும் போது இரண்டு நாட்களாக உங்களைக் கவனித்து வருகின்றேன். நீங்கள் உழைக்காமல் படுத்தே கிடக்கிறீர்கள். இப்படி சும்மா இருந்தால் எப்படி? உழைத்தால் தானே உணவு கிடைக்கும். உழைக்காத சோம்பேறிகளுக்கு உதவி செய்வதில்லை என்ற கொள்கையை உடையவன் நான்!'' என்று சொல்லிவிட்டு வேகமாக முயல் பாய்ந்து சென்றது.

முயல் கூறியதைக் கேட்ட ஓநாய்க்குப் புத்தி வந்தது. வெட்கம் அடைந்தது. அன்று முதல் ஓநாய் உழைத்துச் சாப்பிடுவது என்ற முடிவுக்கு வந்தது.

# புத்திசாலி மேய்ப்பன்



இராஜவர்மன் ஒரு தலை சிறந்த ஓவியன். ஒரு நாள் அந்த ஓவியன் வரைதற் பொருட்களுடன் அழகான மலை உச்சி ஒன்றிற்குச் சென்று அதன் அழகை இரசித்து நேர்த்தியாகத் தூரிகையால் திரையில் வரைந்தான்.

சற்றுப் பின்நோக்கி நகர்ந்து நின்று தன் ஓவியத்தின் அழகை நேர்த்தியை பரிசீலித்தான். அங்கங்கே சில தீட்டல்கள் திருத்தங்களைச் செய்தான். மீண்டும் பின்நோக்கி நகர்ந்தான்.

இராஜவர்மனின் கண்கள் திரையிலேயே இருந்ததால் தான் நின்றிருந்த பாறையின் விளிம்பிற்கு வந்து விட்டதை அவன் கவனிக்கவில்லை.


அந்த நேரம் பார்த்து ஆடுமேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் அங்கு வந்தான். இராஜவர்மனின் நிலைகண்டு சற்றும் தாமதிக்காமல் ஒரு பெரியகல்லை எடுத்து திரையை நோக்கிக் குறிபார்த்து எறிந்தான். திரை கிழிந்து போனது.




அதனைக் கண்டு இராஜவர்மன் கோபத்துடன் ஓடிவந்தான். சிறுவனோ "ஐயா! உங்கள் ஓவியத்தைவிட உங்கள் உயிர் முக்கியம் சற்றுத் திரும்பிப் பார்த்தால் உண்மை புரியும்" என்று கூறினான். திரும்பிப் பார்த்த இராஜவர்மன் ஆச்சரியமடைந்தான்.

சிறிது தூரம் பின்நோக்கியிருந்தால் அங்கிருந்து ஆழமான பள்ளத்தில் வீழ்ந்திருப்பான். தனது உயிரைக் காத்த சிறுவனை கட்டித் தழுவி நன்றி சொன்னான்.

# கம்பளிப் பூச்சிகள் எப்படி பட்டாம் பூச்சிகளாகின்றன?



குட்டிக் கம்பளிப் பூச்சிகள் வளர்வதற்கு ஏற்றதாக உணவு செடிகள் உள்ளதா என்பதை உணர் கொம்புகள் மற்றும் நாக்கு என்பவை மூலம் சோதித்த பின்பே பட்டாம் பூச்சிகள் முட்டை இடும்.



## உருமாற்றம்

கம்பளிப் பூச்சி முழுமையாக வளர்ந்த பின் முட்டை புழுவாகிறது. முட்டைப் புழுவின் ஓட்டின் உள்ளே கம்பளிப்பூச்சி உடம்பை உடைத்து கொண்டு வெளி வந்து மெதுமெதுவாக அழகிய பட்டாம் பூச்சியாகிறது. இந்த நிகழ்வுக்கு பெயர் தான் உருமாற்றம்.



# வான் (Van) பயணம்

வான் பறந்து வருகுது
வழிகள் எங்கும் நிற்குது
நானும் தாவி ஏறிட
நகர்ந்தும் வரைந்தும் ஓடுது.

நெருங்கி ஒடுங்கிப் பலருடன்
நெருக்கி அடுக்கி ஏற்றுவார்
சுருங்கிக் கால்கை விறைத்திட
சுருட்டி வானுள் இருத்துவார்.

பயணம் முடியும் பாதையில்
பாய்ந்து இறங்கச் சொல்லுவார்
கருணை இல்லார் வாகனம்
கவலை சேர்க்கும் பயணமாம்.

–உமாபாரதி



அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்**
**அர்ச்சுனா, சிறுவர் வட்டம்**
**361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

# அர்ச்சுனா

ARCHUNA

## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ..............................................................

..............................................................

வகுப்பு : ..............................................................

பிறந்த திகதி : ..............................................................

பாடசாலையின் பெயர் : ..............................................................

..............................................................

வீட்டு முகவரி : ..............................................................

..............................................................

.................................... ....................................

மாணவர் கையொப்பம் அதிபர் கையொப்பம்



# அர்ச்சுனா

## சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள், ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

அர்ச்சுனா
ARCHUNA
சிறுவர் வட்டம்

## அங்கத்துவ இலக்கம் – 23



செல்வி.தாட்சாயினி குகனேந்திரன்.
தரம் – 09
யா/தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை ம.வி.

## அங்கத்துவ இலக்கம் – 24



மேரிசைலா இராஜேந்திரன்
தரம் 8
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

## அங்கத்துவ இலக்கம் – 25



ஜிலானி வைத்திலிங்கம்
தரம் 2
யா/யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

## அங்கத்துவ இலக்கம் – 26



உதயராசா கவிநிலவன்
தரம் 5
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

# மீன்கள்



எண்ணற்ற வண்ணமாம் மீன்களடா - கடல்
ஏரி குளங்களில் நீந்துதடா.
கண்ணுக்கு நல்லழ கென்று தம்பி - தொட்டி
கட்டியும் வீட்டில் வளர்ப்பானடா.

மின்னும் ஒளிக்கீற் றசைவது போல் - சிறு
மீன்கள் தடாகத்தில் நீந்துதடா.
பொன்னும் பொருட்களும் தேடாமல் - நீருள்
புகுந்து மிதந்தவை போகுதடா.

ஆழி நதிகள் குளங்களிலும் - அவை
அமிழ்ந்து அழகுற நீந்துதடா
வாழத் துடிக்கும் மனிதருக்கு - தமை
வழங்கியே நல்லுண வாகுதடா.



–நெடுந்தீவு மகேஷ்–



# வண்ண வாயு

சிவப்பு, பச்சை, நீல நிறங்களில் ஒரு வண்ணக் கலவையிலான வாயுவை நாஸா படம் பிடித்துள்ளது. அது விண்ணில் உள்ள நெருப்புப் பந்துகள் வெடித்துச் சிதறும் போது ஏற்படும் வாயு என்று ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். இந்த நெருப்புப் பந்துகள் வெடித்துச் சிதறினால், அதன் தாக்கம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்றும், அவை சூரியனின் வெப்பத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் இது குறித்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வெடித்துச் சிதறும் நெருப்புப் பந்துகளில் இருந்து வெளியாகும் அணுக்கள் மின்ன ணுவுடன் சேர்ந்து 'எக்ஸ்ரே' கதிர்களையும் உண்டாக்கலாம்.

ஆ.அனித்தா
தரம் – 09
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.



## உணவு என்ற உடனே எமக்கு அதன் அறுசுவைதான் ஞாபகத்துக்கு வரும். அவை என்னென்ன?

இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு. இந்த அறுசுவைகளையும் மனிதனின் நாக்கு சோதித்து அறிந்துவிடுமா? இல்லவே இல்லை. அறிவியல் ஆய்வின் விளக்கத்தின் படி நாக்கின் மேல்பரப்பில் இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு என்ற நான்கும் சுவைகளை அறியக் கூடிய நான்கு விதமான சுவைப்பகுதிகள் மட்டுமே உள்ளது. அப்படியானால் புளிப்பையும், துவர்ப்பையும் அறிந்துகொள்வது எப்படி? வாயில் மேல் அண்ணப் பகுதியின் மூலமாகத்தான் அறிந்துகொள்கிறோம்.

# Start With English



## Letters of the alphabet

pP qQ rR sS tT




ஆங்கிலம் கற்போம்


6
uU
vV
wW
wall
zebra
yellow




# கொழும்பில் இப்படியும் ஓர் அனுபவம்

ப்பாம் டப்பாமிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது: வெள்ளவத்தைக்குப் போவதற்கு பஸ்ஸிற்காகக் காத்திருந்து அலுத்துப் போய் நடந்தே போகலாமா என்ற யோசித்தார்கள். அந்த நேரம் பார்த்து ஒரு மினிபஸ் வந்தது அது நின்றதும் ஆவலுடன் போய் கண்டக்டரிடம் சில்லறைக் காசைக் கொடுத்தார்கள். அவன் உடனே வாங்கி விட்டு "பஹிண்ட" என்று இறங்குகிற பயணிகளுக்குச் சொன்னான். அதே நேரம் லப்பாம் டப்பாம் ஏறப் போகத் தடுத்தான். பின்பு 'நகிண்ட' என்றான்.

இவன் என்ன சொல்கிறான். ஏறச் சொல்கிறானா, இறங்கச் சொல்கிறானா அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த நேரம் பார்த்து பஸ் புறப்பட்டுச் சென்றது.

சிங்களத்தில் 'பஹிண்ட' என்றால் இறங்க வேண்டும், 'நகிண்ட' என்றால் ஏற வேண்டும் என்பதைப் புரியாத இருவரும் காசு கொடுத்தும் பஸ்சைக் கோட்டை விட்டுவிட்டார்கள்.

அவர்களுக்கு வெறுப்பும், ஆத்திரமும் சேர்ந்து வந்தன, 'தமிழ் தான் எல்லாரும் பேசணும்னு சட்டம் வைக்க வேணும்' என்றான் லப்பாம். அப்போது டப்பாம் 'அங்கை பார்டா மூணு சில்லுக்கார்' என்றான்.

றோட் ஓரத்தில் இருந்த ஓட்டோவைச் சுட்டிக் காட்டினான் டப்பாம் இதற்குமுன் அவர்கள் ஓட்டோவைப் பார்த்ததில்லை.



ஆவலுடன் அதைப் பார்த்தவர்கள். ஆசையோடு போய் ஏறி இருந்து பார்த்தார்கள்.

மரத்தடியில் நின்ற பீடிபற்ற வைத்துக் கொண்டிருந்த ஒட்டோ டிரைவர். இவர்கள் ஏறுவதைப் பார்த்ததும் சவாரி கிடைத்த மகிழ்ச்சியில் ஓடிவந்து ஏறி ஸ்ரார்ட் பண்ணினான். திடீரெனப் புறப்பட்ட ஒட்டோ 'எங்கே போறது' என்று திரும்பிக் கேட்டான்.

ஒட்டோ திடீரெனப் புறப்பட்ட அதிர்ச்சியில் அவர்களால் பேசமுடியவில்லை. 'எங்கே போறது' என்று மீண்டும் கேட்டான் டிரைவர்.

'எங்கையும் போறேல்லை. இறக்கி விடு' என்று சத்தம் போட்டான் லப்பாம்.

டிரைவருக்கு 'பொறல்லை' என்று கேட்டது. இவர்கள் பொறல்லைக்குப் போகிறார்கள் என நினைத்தான்.

ஒட்டோ கொழும்பு நகரைச் சுற்றிவிட்டு பொறல்லைச் சந்தியில் நின்றது. 'ஐநூறு ரூபா வாங்கணும் முன்னூறு ரூபா எடு' என்றான் டிரைவர். அவனுடைய ரவுடி மீசையும், பரட்டைத் தலையும் பயத்தையும் திகிலையும் ஏற்படுத்தின. ஒன்றும் பேசாது முன்னூறு ரூபாவைக் கொடுத்தார்கள்.



'ஏன்டா முன்னூறு ரூபா எடுத்தான்' என்று கேட்டான் டப்பாம்.

"மூணு சில்லுக்கார், ஒரு சில்லுக்கு நூறு ரூபா' என்றான் லப்பாம்.

**அமரர். வில்வம் பசுபதி**



'அப்ப நாலு சில்லுக் கார்னா நானூறு ரூபா எடுப்பான்' என்றான் டப்பாம்.

'நாம யாழப்பாணம் போகவும் காசு முடியப்போகுது' என்றான் லப்பாம்.

அப்போது அங்கு ஒரு பஸ் வந்து நின்றது.

உடனே இருவரும் பாய்ந்துபோய் பஸ்ஸில் ஏறினார்கள்.

'டேய் இந்த பஸ் யாழ்ப்பாணம் வவுனியா இல்லாட்டி பருத்தித்துறை போகுது எங்கையாவது போவமாடா' என்ற சொன்ன வண்ணம் லப்பாம் சீட்டில் அமர்ந்தான். அருகில் டப்பாம் அமர்ந்தான்.

அந்த பஸ் அங்கொடை நோக்கிப் போகும் பஸ், அது அவர்களுக்குத் தெரியாது.

அங்கொடை பைத்திய ஆஸ்பத்திரிக்கு முன் அது நின்றது. எல்லாப் பயணிகளும் இறங்கினார்கள்.

கண்டக்டர் இவர்களை இறங்கச் சொன்னர். 'நாங்க யாழப்பாணம் போறம்' என்று இருவரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள். இவர்களுக்கு 'நட்கழண்டு போச்சு' என்று சொன்ன கண்டக்டர் 'இறங்கடா' என்று சத்தம் போட்டான். இருவரும் பயத்தினால் ஒன்றும் பேசாது இறங்கினார்கள்.

அவர்கள் இறங்கியதும் வினோதமான ஓசை கேட்டது. ஆஸ்பத்திரியின் முன் முற்றத்தை எட்டிப்பார்த்தார்கள். அவர்கள் கண்ட காட்சியும் வினோதமாக இருந்தது.

அங்கு சில மனநோயாளிகள் வெவ்வேறு கோலத்தில் இருந்தனர். ஒருவர், காதில் பூ வைத்துக் கொண்டு நடனமாடினார். இன்னொருவர், சொப்பிங்பாக்கை பலூன் போல் ஊதிக்கொண்டிருந்தார். ஒருவர், தனக்குத் தானே கேள்வி கேட்டுப் பதிலும் சொல்லிக் கொண்டிருந்தார். இந்தக் காட்சிகளைப் பார்த்த லப்பாம் டப்பாமிற்கு ஒன்றும் புரியவில்லை. அது பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்பது தெரியாது அவர்களுக்கு அப்போது லப்பாமின் பார்வை ஒருவன்மேல் சென்றது அவன் கறுத்த பெனியனும் கழுத்தில் லேஞ்சியுடனும் இருந்தான்.

'டேய் அங்கை பாரடா எங்கடை கொழும்பு மாமா' என்றான். டப்பாம் பார்த்தான். 'வாடா உள்ளுக்குப் போவம்' என்று சொல்லிய வண்ணம் உள்ளே போனான். அவனுடன் லப்பாமும் போனான்.

கறுத்த பெனியன் போட்டவன் அரைப் பைத்தியம், 'மாமோய் எங்கே சைக்கிள்' என்று லப்பாம் கேட்டதும் அவர்களை உற்றுப் பார்த்தான். பின்பு சிரித்தான் பின்பு சைக்கிள் ஓடுவது போல பாவனை செய்து ஓடினான். அதைப் பார்த்த இன்னொரு பைத்தியம் 'டேய் என்னட்டை கார் இருக்குடா' என்று சொல்லியபடி 'கிர்ர்' என்று உரத்துக்கத்தியபடி கார் ஓட்டுவது போல பாவனைசெய்தான். மதில் மேல் இருந்து சைக்கிள் ஓட்டுவதையும், கார் ஓட்டுவதையும் பார்த்த முழுப் பைத்தியம், 'என்னட்டை றெயில் இருக்குடா. யாழ்தேவி என்ற சொல்லிய வண்ணம் 'சிக்குச் சிக்கு என்று றெயில் ஓடத் தொடங்கினான். மரத்தில் இருந்து இவர்களைப் பார்த்த பைத்தியத்திற்கு ஆவேசம் வந்தது. 'பார்டா என்ரை பிளேன் பறக்குது' என்று சொன்னவன் மரத்தில் இருந்து குதித்து இரண்டு கைகளையும் செட்டைபோல் விரித்து அங்கும் இங்கும் ஓடினான். 'டேய் உன்ரை பிளேனுக்கு ஹோர்ண் இருக்கடா' என்று கேட்டான் கார் பைத் தியம். இது விஷயமாக இருவருக்கும் சண்டை மூண்டது.



இந்தக் காட்சிகளினால் அதிர்ச்சி அடைந்த லப்பாம் டப்பாம் அந்த இடத்தை விட்டு ஓடினார்கள். இவர்கள் ஓடுவதைக் கண்ட நாலு பைத்தியங்களும் சண்டையை மறந்து இவர்களைத் துரத்தினார்கள்.

ஓடுவதில் லப்பாம் டப்பாமை யாரும் வெல்ல முடியாது. அவர்கள் முயல் போல் பாய்ந்து கேற்றுக்கு அப்பால் ஓடித் தப்பினார்கள்.

'டேய் கொழும்பிலை இப்படி ஒரு மனுசரா? என்னடா இது கொழும்புக்கு வந்த சோதனை' என்று லப்பாம் சொன்ன போது 'யாழ்ப்பாணம் தாண்டா உலகத் திலேயே நல்ல இடம்' என்றான் டப்பாம்.

# உலக அறிவை வளர்த்துக் கொள்வோம்

1) இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி யார்?
**டொக்டர் ராஜேந்திர பிரசாத்**

2) தாஜ்மஹால் யாரால் கட்டப்பட்டது?
**சாஜஹான்**

3) கடிகாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
**ஏ.எல்பிராகெட்**

4) தரைக்கு வெளியே வாழக்கூடிய மீன் எது?
**மேடக்**

5) பற்தூரிகையைக் கண்டுபிடித்தவர் யார்?
**சீன நாட்டினர்**

6) யூதர்களுடைய நாடு எது?
**இஸ்ரேல்**

**வி.கார்த்திகா.**
**குகன் கல்வி நிறுவனம்,**
**ஆவரங்கால்.**



# டி.எஸ்.சேனாநாயக்க

1884 ஒக்டோபர் 20ஆம் திகதி ஹாபிடிகம பிரதேசத்தில் போதலேகம எனும் வளவையில் பிறந்தார்.


எலிசபெத் பெரேரா தொன்ஸ்டெபர் சேனாநாயக்க தம்பதிகளின் புதல்வர்.

இவர் பிதா என்று அழைக்கப்படுவார்.


இவர் கல்கிஸ்ஸ சென் தோமஸ் கல்லூரியில் கல்வி கற்று எழுதுவினைஞராக அரச சேவையில் கடமையாற்றினார்.

இலங்கையில் முதலாவது பிரதமராக இருந்தார்.

1952 மார்ச் 22 ஆம் திகதி காலமானார்.



**வி.பகீனா.**
**தரம் – 9,**
**யா/ஸ்ரீ சோமஸ் கந்த கல்லூரி, புத்தூர்.**



# வாத்துக் குஞ்சு

புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்ற வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. இந்த வாத்திற்கு மற்ற வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை. முட்டைகள் உடைந்து வாத்துக்குஞ்சுகள் ஒவ்வொன்றாக 'ட்சிக், ட்சிக்' என்று வெளிவந்தன. தாய் வாத்து 'குவா, குவா' என்று கத்தியது. குஞ்சுகள் மெதுவாக எழுந்து நின்று பச்சை இலைகளைப் பார்த்தன. ஒரு முட்டையிலிருந்து மட்டும் குஞ்சு இன்னும் வரவில்லை. தாய் வாத்து அதன் மேல் உட்கார்ந்து அடைகாத்தது. வயதான வாத்து சொன்னது. 'நன்றாகப் பார். இது வான்கோழி முட்டையாக இருக்கும். அது உனக்கு ஏன்? குஞ்சுகளை அழைத்துக் கொண்டு நீந்தப் போ!' என்றது. தாய் வாத்து அதைக் கேட்கவில்லை. கடைசியாக முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்தது.

குஞ்சு பெரிதாகவும் விகாரமாகவும் இருந்தது. மற்ற வாத்துக் குஞ்சுகளைப் போல் அது இல்லை. அது வான்கோழிக் குஞ்சாக இருக்குமோ? தண்ணீரில் விட்டால் தெரிந்து விடும்.

வாய்க்காலுக்குச் சென்று குவா, குவா என்று சொல்லி நீந்தியது. குஞ்சுகளும் தண்ணீரில் இறங்கி நீந்தின. அழகில்லாத பெரிய குஞ்சு நீந்தியது. 'இது வாத்துக் குஞ்சுதான்; வான்கோழிக் குஞ்சு இல்லை. என்னுடன் வாருங்கள், குஞ்சுகளா, பூனைகள் ஜாக்கிரதை' என்றது தாய் வாத்து. அது குஞ்சுகளுக்கு நடக்கக் கற்றுக் கொடுத்தது. ஒரு வாத்து பறந்து வந்து அவலட் சணமான குஞ்சின் மேல் உட்கார்ந்து கழுத்தைக் கொத்தியது. 'குஞ்சை ஒன்றும் செய்யாதீர்கள்' என்றது தாய் வாத்து. 'அழகில்லாவிட்டால் என்ன? நல்ல குஞ்சு, நன்றாக நீந்துகிறது. முட்டையில் நீண்ட நேரம் இருந்ததால் இப்படி இருக்கிறது' என்றது.

கோழிகளும் பெரிய வாத்துக்களும் குஞ்சைக் கேலி செய்தன. கடித்தன, கொத்தின. கூடப் பிறந்த குஞ்சுகளுக்கும் அதனைக் கண்டால் பிடிக்கவில்லை. 'உன்னைப் பூனை கவ்விக் கொண்டு போகட்டும்' என்று சபித்தன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமி குஞ்சை உதைத்துத் தள்ளினாள்.




குஞ்சு தப்பித்து புதர்கள் நிறைந்த இடத்திற்கு வந்தது. வேறு சில வாத்துக்கள் 'நீ யார்? உன்னைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது. உன்னை யார் சேர்த்துக் கொள்வது?' என்று கேலி செய்தன. அதனால் அது காட்டிற்கு வந்தது. ஒரு பழைய குடிசைக்குப் பக்கத்தில் நின்றது. களைத்துப் போனதால் நிற்கவே முடியவில்லை. வாலில் பலமாக ஊன்றி நின்று கொண்டது. குடிசையில் ஒரு கிழவியுடன் பூனையும் கோழி யும் வசித்து வந்தன.

பூனை வாத்துக் குஞ்சைப் பார்த்து, 'மியா, மியா' என்று கத்தியது. கோழி 'கொக்கரக்கோ' என்றது. கிழவி வெளியே வந்து வாத்துக் குஞ்சைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கோழி ''வாத்தே, உன் னால் முட்டையிட முடி யுமா?'' என்று கேட்டது. அதற்குக் குஞ்சு ''முடி யாது'' என்றது.

பூனை: உன்னால் நிமிர்ந்து நிற்க முடி யுமா? 'உர்'ரென்று சப் தம் போடத் தெரியுமா? என்றது. அதற்கும் குஞ்சு ''தெரியாது'' என்றது.

வாத்துக் குஞ்சு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டது. 'குட்டையில் சென்று நீந்தினால் எவ்வளவு சுகமாக இருக்கும்? நீந்தித் தண்ணீரில் மூழ்கி கீழே சென்று மேலே வருவது எனக்குப் பிடிக்கும்' என்றது. அதற்குக் கிழவி அனுமதித்தாள். குஞ்சு வெளியே வந்து வாய்க் காலில் நீந்தியது.



றான். குஞ்சு அங்கிருந்து பறந்து வந்து விட்டது.


அன்னப் பறவைகளிடம் பறந்து சென்றது. பறந்து வந்து தண்ணீரில் நீந்திய குஞ்சை அன்னங்கள் பார்த்தன. அன்னங்கள் என்னைக் கொல்லப் போகின்றன என்று பயந்தது குஞ்சு. குனிந்து தண் ணீரைப் பார்த்தது. தன்னுடைய பிம்பம் போலவே அன்னங்களின் பிம்பமும் இருப்பது தெரிந் தது. அடடா, நான் அழகில்லாத வாத்து அல்ல, அன்னப்பறவை என்று நினைத்துக் கொண்டது.

வாத்து அடைகாத்துப் பிறந்தால் என்ன? அன்னம் அன்னம் தானே? மற்ற அன்னங்கள் அதைச் சுற்றி நீந்திவந்து தங்கள் சொண்டினால் தடவிக் கொடுத்தன. வாய்க்காலுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் 'அதோ ஒரு புதிய அன்னக் குஞ்சு' என்று சொன்னார்கள். அன்னக்குஞ்சு எவ்வளவு அழகாக இருக்கிறது என்று பேசிக் கொண்டு ரொட்டியை வீசினார்கள். அன்னக் குஞ்சுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ஆனால் தற்பெருமை கிடையாது. நல்ல இதயத்தில் தற்பெருமைக்கு இடமில்லை அல்லவா? அழகில்லை என்று சொன்னவர்கள் இதைப் போல் அழகு உண்டா என்றார்கள். அன்னக் குஞ்சு மற்ற அன்னங்களுடன் சந்தோஷமாக வாழ்ந்தது.

பிறகு குளிர்காலம் வந்தது. தண்ணீர் குளிர்ச்சியாக இருந்தது. சில நாட்களில் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து விட்டது. அங்கு அன்னப் பறவைகள் வந்தன. நல்ல அழகு. இறகுகள் பளபள வென்று வெள்ளையாக இருந்தன. நீண்ட ஒல்லியான கழுத்து. 'எவ்வளவு அழகு' என்று குஞ்சு வியந்தது. தண்ணீரிலிருந்து கழுத்தை நீட்டி மேலே பறக்கும் அன்னங்களைப் பார்த்தது. அந்தப் பறவைகள் யார் என்று குஞ்சுக்குத் தெரியாது. அவர்களை மிகவும் பிடித்திருந்தது.

தண்ணீர் உறைந்து பனிக்கட்டியானதால் நீந்த இடமில்லை. குஞ்சு பனிக்கட்டியில் நீந்த முடியாமல் தத்தளித்தது. ஒரு குடியானவன் பனிக்கட்டியை உடைத்து குஞ்சைமீட்டு வீட்டிற்கு எடுத்துச் சென்

# நிறம் தீட்டி மகிழ்வோம்



# வேருக்குத் தண்ணீரா?



முன்னொரு காலத்தில் பொன் மலை என்ற நகரம் இருந்தது. அதற்குச் சிறிது தொலைவில் அழகிய பூந்தோட்டம் ஒன்று இருந்தது. அங்கே பல வகையான வண்ண மலர்கள் பூத்திருந்தன. தோட்டக் காரன் ஒருவன் அதை நன்றாகக் கவனித்து வந்தான்.

அங்கே நிறைய குரங்குகள் இருந் தன. தோட்டக்காரன் இடும் வேலைகளை அவை செய்து வந்தன. "காளி கோயில் திரு விழா இரண்டு நாட்கள் நிகழ உள்ளது. ஆண்டு தோறும் சீரும் சிறப்புமாக நிக ழும் விழா அது. அதைக் காண மக்கள் திரளாக வருவார்கள்" என்பதைக் கேள்விப் பட்டான் அவன். தானும் திருவிழாவுக்குச் செல்ல நினைத்தான்.

"திருவிழா பார்த்து திரும்ப மூன்று நாட்கள் ஆகும். தண்ணீர் ஊற்றா விட்டால் பூச்செடி வாடி விடும்" என்ன செய்வது? என்று சிந்தித்தான் அவன். குரங்குகளின் நினைவு அவனுக்கு வந்தது.

'குரங்குகளிடம் செடிகளுக்குத் தண் ணீர் ஊற்றச் சொல்வோம். அவையும் பொறுப்பாகச் செய்யும். மகிழ்ச்சியாக திரு விழா பார்த்து திரும்புவோம்" என்ற முடி வுக்கு வந்தான்.

அங்கிருந்து குரங்குகளை அழைத் தான். "நான் திருவிழா காணச் செல்கி றேன். திரும்பி வர மூன்று நாட்கள் ஆகும். தண்ணீர் ஊற்றாவிட்டால் செடிகள் வாடி விடும். எனக்குப் பதில் நீங்கள் செடிக ளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். வேர் நனையும் படி ஊற்ற வேண்டும்.

உங்களை நம்பி நான் செல்லலாமா?'' என்று கேட்டான். அங்கிருந்த குரங்கு களின் தலைவன் "நீங்கள் திருவிழா பார்த்து விட்டு வாருங்கள். நாங்கள் செடி களுக்குத் தண்ணீர் ஊற்றுகிறோம்'' என்றது. ''தோட்டத்தை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி புறப்பட்டான். ஒவ்வொரு குரங்கும் ஒவ்வொரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டது. தோட்டக்காரன் தொலை விலிருந்த குளத்திலிருந்து தண்ணீரை கொண்டு வந்தான். அவற்றைப் பார்த்து குரங்குகளின் தலைவன் "தொலைவில் இருந்து நாம் தண்ணீரை எடுத்து வருகிறோம். அதனால் யாரும் தண் ணீரை வீணாக்கக் கூடாது. குறைந்த அளவு தண்ணீரே பயன்படுத்த வேண்டும். செடிகளும் நன்கு வளர வேண்டும். அதற்கு என்ன செய்வது? என்று கேட்டது. குரங்குகளில் ஒன்று "தோட்டக்காரர் நம் மிடம் என்ன சொன்னார். நாம் எதற்காக செடிகளைச் சுற்றித் தண்ணீரை ஊற்ற வேண்டும்? தண்ணீரை வீணாக்க வேண் டாம்'' என்று கேட்டது.

"நீ என்ன சொல்கிறாய்? விளங்கவில் லையே'' என்று கேட்டது குரங்குகளின் தலைவன்.



“ஒவ்வொரு செடியாகப் பிடுங்குவோம். அதன் வேரைப் பாத்திரத்தில் உள்ள தண் ணீருக்குள் வைப்போம். வேரும் தேவையான தண்ணீரை உறிஞ்சும். பிறகு அந்தச் செடியை நடுவோம். இப்படிச் செய்தால் தண்ணீர் வீணாகாது'' என்றது அந்தக் குரங்கு. எல் லாக் குரங்கு களும் அதன் திட் டத்தை ஏற்றுக் கொண் டன.



அதன்படியே ஒவ் வொரு பூச்செடியாகப் பிடிங்கின. அவற்றின் வேரைப் பாத் திரத்தில் உள்ள நீரில் வைத்தன. மீண்டும் அந்தச் செடியை பூமியில் நட்டன. செடிக ளைப் பிடுங்கி நட்டதால் அவை வாடத் தொடங்கின.

“வேருக்குத் தண்ணீர் ஊற்றியும் ஏன் இவை வாடுகின்றன? ஒன்றும் புரியவில் லையே” என்று குரங்குகள் குழம்பின.

அடுத்த நாளும் அவை செடிகளைப் பிடுங்கின. பாத்திரத்தில் உள்ள தண்ணீ ரில் வேரை நனைத்தன. மீண்டும் நட்டன.

மூன்று நாட்கள் கழித்து தோட்டக்காரன் அங்கு வந்தான். செடிகள் அனைத்தும் வாடிக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.


குரங்குகளைப் பார்த்து அவன் “செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வில்லையா? ஏன் இவை இப்படி வாடிக்கிடக் கின்றன?' என்று கோபத் துடன் கேட் டான்.

செடிகளுக்குத் தண் ணீர் ஊற்றிய முறையைக் குரங்குகள் சொல்லின. ‘‘ஐயோ! முட்டாள் குரங்குகளிடம் பொறுப்பை ஒப்படைத் தேனே. என் தோட்டமே பாழாகி விட்டதே. இனி நான் என்ன செய்வேன்?'' என்று அழுது புலம்பினான் அவன்.

# சூறாவளிகள்

அண்மைக்காலங்களில் மனிதனுக்கு பெரும் அழிவினை ஏற்படுத்திவரும் இயற்கை அனர்த்தங்களில் சூறாவளி யும் ஒன்றாகும். சூறாவளிகள் சுழற்சி, அசைவு எனும் செயற்பாடுகளுடன் கூடி யது. இச் சூறாவளிகள் (1) வெப்ப வலயச் சூறாவளிகள், (2) இடைவெப்பவலயச் சூறாவளிகள் என இருவகைப்படும். வெப்ப வலயச் சூறாவளிகள் உருவாவதற்கு அயன மண்டலப்பகுதிகளில் நிலவும் உயர் வெப் பம் காரணமாகும். உயர்வெப்பம் காரண மாக வளி விரிவடைந்து மேல் எழுவதால் ஏற்படும் தாழ் அமுக்கம் நோக்கி காற்று கள் ஒடுங்குவதால் சூறாவளி ஏற்படுகி றது., இடைவெப்பவலயத்தில் குளிரான காற்றும் வெப்பமான காற்றும் சந்திக்கும் போது வெப்பக்காற்று மேல் எழ குளிரான








காற்று கீழ் இறங்க காற்று சுழற்சி ஏற்படு கிறது.

அயனமண்டலச் சூறாவளிகள் கரிபி யன் கடலில் ஹரிக்கேன் எனவும், தென் சீனக் கடல் தென்கிழக்காசிய பகுதி களில் 'தைபூன்' எனவும், அழைக்கப் படுகின்றன. சூறாவளிகளால் பெரும் வெள்ளப் பெருக்கு, பொருட்சேதம், உயி ரழிவு போன்றன ஏற்படுகின்றன. இலங் கைக்கு ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இதன் செல்வாக்கினால் வட கிழக்குப் பகுதிகளில் கடுமையான மழை யைக் காணலாம்.

பல வருடங்களுக்குப் பின் சென்றவருட இறுதியில் அத்திலாந்திக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரப்பகுதிகளில் சூறாவளிகளின் தாக்கம் காரணமாக பல நாடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குறிப்பாக அமெரிக்காவில் 'கத்தரினா', 'ரீட்டா', 'விம்மா' எனும் பெயர்களில் சூறாவளி வீசியது. சூறாவளிக்கு இவ்வாறு பெயர்கள் வழங்குவதற்கும் பலகாரணங்கள் இருந்துள்ளன. ஆரம்பத்தில் மேற்கிந்தியப் பகுதிகளில் சூறாவளிகளுக்கு புனிதரின் பெயர் சூட்டப்பட்டது. 2ஆம் உலக யத்தத்தில் வானிலை ஆய்வாளர்கள் தமது காதலி, மனைவியரின் பெயர்களைச் சூட்டினர். 1963க்கு முன் அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் ஏற்பட்ட சூறாவளிக்கு ஆங்கில அகரவரிசைப்படி பெயரிடப்பட்டது. 1953இன் பின் பெண்களின் பெயர்கள் இடப்பட்டது.

தற்போது உலகவானிலை அமைப்பு அதிகளவில் சூறாவளி ஏற்படும் பகுதிகளை
1) வடஅத்திலாந்திக் வலயம்
2) வடகிழக்கு பசுபிக் வலயம்
3) வடமேற்கு பசுபிக்வலயம்,



4) தென்மேற்கு பசுபிக்வலயம்,
5) வடஇந்திய வலயம்
6) தென்மேற்கு இந்தியவலயம்
7) தென்கிழக்கு இந்தியவலயம்.


என 7ஆகப் பிரித்து பெயரிடுகிறது. அதனடிப்படையில் கத்தரினா, ரீட்டா என்பன அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு உரியவை. ஆசிய சூறாவளிகளும் பூக்கள், மரங்கள் உயிரினங்கள் என்பவற்றின் பெயர் தொடர்பாக இருக்கும். அத்திலாந்திக்கில் ஒவ்வொரு வருடமும் உருவாகும். சூறாவளிக்கு ஆங்கில அகர வரிசைப்படி பெயரிடப்படுகிறது. ஆனால் Q, U, X, Y, Z எழுத்துக்களில் அதிக பெயர் இல்லாத படியால் அவ்வெழுத்துக்கள் புறக்கணிக்கப்பட்டு இங்கு அதிகம் பேசப்படும் ஆங்கில பிரஞ்சு ஸ்பானிய பெயர்களில் பெயர் வைக்கப்படுகிறது.






விளக்கு
அதோ ஒருவிளக்கு இருக்கிறதே!
பருந்து உடனே அந்த விளக்கை தூக்கிச்சென்றது
ஹாய் நான் எடுத்து விட்டேன்!
நான் உடனே வீட்டுக்கு செல்ல வேண்டும்!
சிறிது நேரத்தில்...
நண்பா! இது என்ன?
விளக்கை பார்த்தாயா? இது உன்னுடைய விளக்கை விட பிரகாசமானது!


இது மிக ஆபத்தான விளக்கு
என்ன ஆபத்தா!
ஆபத்து என்றால் மனிதர் கள் எப்படி பயன் படுத்துகிறார்கள்!
அப்போது திடீரென விளக்கு பருந்தின் கால்பட்டு கீழே சரிந்தது!
ஐயோ! உடனே நான் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்!
தீ, பருந்தின் கூட்டில் பற்றியது.
கூடு முழுவதும் பற்றி எரிந்து சாம்பல் கீழே விழுந்தது!
ஐயோ! என் கூடு!
பிறகு-
நண்பா! நீ சொன்னதை நான் கேட்டிருக் கலாம். அடுத்தவர்களைப்போல இருக்கநினைப்பது ரொம்ப தப்பு இப்ப நான் புரிந்து கொண்டேன்!



# கு டி சை




நல்ல சிறிய குடிசை.
நாங்கள் வாழும் குடிசை.
தொல்லை நீங்கித் தூங்க.
தோழர் வந்து கூட.
எல்லை கடந்த அழகு - அதுவே
எங்கள் சிறிய குடிசை.

அம்மா அப்பா தம்பி.
அண்ணன் அக்கா பாட்டி.
எம்மில் பலரும் படிக்க.
என்றும் ஒன்றாய் இருக்க.
செம்மை தூய்மை சேர - அமைதி
சேர்ந்த சிறிய குடிசை.

ஓலை வேய்ந்த குடிசை.
ஒழுங்கு குளிர்மை நிறைக்க.
காலை மாலை என்றும்.
களிக்க இருக்க வியக்க.
சோலை போன்ற முற்றம் - அன்பின்,
சொர்க்கம் எங்கள் குடிசை.

– செ.மகேந்திரன் –

# கம்பஹா மாவட்டம்



| | |
|---|---|
| மொத்தப் பரப்பு | - 1387 சதுர கிலோ மீற்றர் |
| நிலப்பரப்பு | - 1341 சதுர கிலோ மீற்றர் |
| நீர்நிலைகள் | - 46 சதுர கிலோ மீற்றர் |
| பிரதேச செயலாளர் பிரிவுகள் - | 13 (நீர்கொழும்பு, கட்டான, மினுவாங் கொடை, வத்தளை, தொம்பே, திவுலப் பிட்டி, மீரிகம, கம்பஹா, அத்தனகல்லை, மஹர-கடவத்தை, ஜா எல, களனி, பியகம) |




| | |
|---|---|
| சனத்தொகை | - 2111000 (2005இன் பதிவாளர் நாயகம் திணைக்கள மதிப்பீடு) |
| ஆண்கள் | - 1020000 |
| பெண்கள் | - 107000 (2004இன் மதிப்பீடு) |
| 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் | - 1905949 (2004இன் மதிப்பீடு) |
| தொழிலாளர் அணியின் பங்கீடு | - விவசாயம்: 7%, கைத்தொழில்: 40.9%, சேவைகள்: 52.9% |
| நகர்ப்புறச் சனத்தொகை | - 349100 (2001இல்) |
| கிராமியச் சனத்தொகை | - 1714600 (2001இல்) |
| சனத்தொகை அடர்த்தி | - சதுர கிலோ மீற்றருக்கு 1539 (2001இல்) |
| இனரீதியான சனத்தொகைப் பரம்பல் | - சிங்களவர் - 91%, இலங்கைத் தமிழர்-3.2%, இந்திய வம்சா வழித்தமிழர் -0.4%, முஸ்லீம்கள் -3.8%,பறங்கியர்0.5%, மலாயர் -0.7%, செட்டியர் -0.3%, ஏனையோர் - 0.5% |
| வறிய மக்கள் | - 23.9% |
| தொழில் அற்றோர் | - 7.6% |



# வளங்களும் வாய்ப்புகளும்




களிமண், வெண்களி, காரீயம், அலு மினியம் செறிவுள்ள களி, மணல், கரி மண் என்பன இம் மாவட்டத்தில் காணப்படும் கனிய வளங்களாகும். விவசாயத்தைத் தவிர, கம்பஹா மாவட்டத்தில் கைத்தொழில் உற்பத் தித் துறை நன்கு வளர்ச்சி அடைந் துள்ளது. பெரிய ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகள் பெரும் எண்ணிக்கை யில் காணப்படுகின்றன. செங்கல், ஓடு என்பவற்றின் உற்பத்தித் தொழி லும் மேற்கொள்ளப்படுகின்றது.




நிலப்பரப்பில் 72% விவசாயத்திற் காக ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னை, நெல், மரமுந்திரி, அன்னாசி, றபர் என்பனவே பிரதான பயிர்களாகும். கோழி வளர்ப்பு, ஆடுமாடு மற்றும் எருமை வளர்ப்பு என்பன வும் ஓரளவுக்கு மேற்கொள்ளப்படுகின்றன. சூழல் மற்றும் கலாசார சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இம் மாவட்டத்தில் வாய்ப்புக்கள் உள்ளன.





# வெள்ளை மாளிகை

அமெரிக்க அதிபர் வசிக்கும் அரசு மாளிகையை வெள்ளை மாளிகை என்று அழைப்பர். இது வாஷிங்டனின் மையப் பகுதியில் உள்ளது. இதை வடிவமைத்தவர் அயர்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹோபன் என்பவராவார். இவர் அயர்லாந்தின் டப்ளின் என்ற இடத்திலுள்ள பிரபுக்கள் வசிக்கும் லீன்ஸ்டர் என்ற மாளிகையை மாடலாக வைத்தே வெள்ளை மாளிகையை வடிவமைத்தார்.




வெள்ளை மாளிகையின் முதல் பகுதி 1792 முதல் 1800 வரையுள்ள காலகட்டத்தில் கட்டப்பட்டது. ஜான் ஆதம்ஸ் என்ற அமெரிக்க அதிபர்தான் முதன் முதலில் வெள்ளை மாளிகையில் வசித்தவர். இவரும் இவர் மனைவியும் வசித்த போது ஆறு அறைகள் மட்டுமே இருந்தன.


1814 இல் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிற்கும் இடையே போர் நடந்த போது பிரிட்டிஷ் படையினரின் தாக்குதலால் அதிபர் மாளிகையின் உட்பகுதி பாதிக்கப்பட்டது. இதைச் சரிச் செய்யும் பொருட்டு புகைப் படிவுகளை நீக்க மாளிகைக்கு வெள்ளை பெயின்ட் அடிக்கப்பட்டது. அன்றிலிருந்து தான் அதிபர் மாளிகை 'வெள்ளைமாளிகை' என்று அழைக் கப்பட்டது.

தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் வரிசையான தூண்களுடன் அரை வட்ட வடிவ போர்டிகோ 1920 இல் புதிதாக இணைக்கப்பட்டது. கிழக்குப் பகுதியிலுள்ள அதிபர் அலுவலகம் 1942 இல் கட்டப்பட்டது.

வெள்ளை மாளிகையில் தற்போது 54 அறைகளும் 16 குளியல் அறைகளும் மிகப் பெரிய வரவேற்பறை, டாக்டர்கள் அறை, ஸ்டுடியோ, நீச்சல் குளம், பொது மக்கள் அறை, சாப்பாட்டு அறை, கிழக்குப் பகுதியில் நீலம் பச்சை மற்றும் சிவப்பு நிற விருந்தினர் அறைகள் என்பன உள்ளன. வெள்ளை மாளிகை முழுவதும் குண்டு துளைக்காத வகையில் பாதுகாப்பானது. வெள்ளை மாளிகையைச் சுற்றிலும் 16 ஏக்கர் பரப்பளவு உள்ள புல் பதித்த தரையுடன் கூடிய தோட்டமும் உள்ளது.



## இரண்டு படங்களுக்கும் இடையிலான 7 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்



ஜிலானி வைத்திலிங்கம்
தரம் – 2
யா/யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.




கனிஎழில் அன்ரன்செபதாஸ்
தரம் – 02
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை
மானிப்பாய்.

# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்



மேரிசைலா இராஜேந்திரன்
தரம் - 8
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.











# பிரேஸ்லெட்!

**தேவையான பொருட்கள்:**
பரங்கிகாய் விதை அல்லது தர்பூசணி விதை சிறிது. பச்சை, நீலம் மற்றும் லைட் வைலட் பெயின்ட், பிரஷ், கனமான ஊசி, 30செ.மீ., நீளம் மெல்லிய எலாஸ்டிக்.

**செய்முறை:**
01) சுத்தம் செய்யப்பட்ட தர்பூசணி விதையில் நீலம், பச்சை மற்றும் லைட் வைலட் கலர் பெயின்ட் அடித்து உலர வைக்கவும். உலர்ந்ததும் விதையின் மறுபக்கம் பெயின்ட் அடித்து உலர வைக்கவும்.

02) விதையின் நடுவில் ஊசியால் துளையிடவும். (பெரியவர்களிடம் சொல்லி துளைப் போடுங்கள்) மெல்லிய எலாஸ்டிக்கில் விதைகளை உங்கள் விருப்பப்படி கலர் விதைகளை வெவ்வேறு டிசைன்களில் கோர்க்கவும்.

03) எலாஸ்டிக்கை மணிக்கூட்டு அளவு அளந்து எடுத்துக் கொண்டால் பிரேஸ்லெட் அழகாக இருக்கும். முடிச்சுப் போட சிறிது எலாஸ்டிக்கை விட்டுக் கொள்ளுங்கள்.



GATEWAY CfICT

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK
TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY




- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

CONTACT

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY CfICT · GATEWAY Language Centre · GATEWAY KIDS SCHOOL of COMPUTING · IPICT International Pedagogical ICT Licence · ICDL · e-Citizen · e-TYPE




'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. இல. 361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.